Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 309

சனிக்கிழமை
01 ஒக்ரோபர் 2022

புரட்டாதி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

## மண்கும்பானில் மோட்டார் ஷெல்

யாழ்ப்பாணம், ஒக். 1
ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வேலணை மண்கும்பான் பகுதியில் மோட்டார் ஷெல் ஒன்று மீட்கப்பட்டுள்ளது என்று ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர். 11 ➤




"அப்ப பேப்பர்காரர் தான் இல்லாத பிரச்சினையை இருக்கிற மாதிரி சோடிக்கினம் எண்டு சொல்ல வாறாரோ ஐயா"

# தமிழ் மக்களுக்கென்று பிரச்சினைகள் இல்லை

### வீரசேகர மீண்டும் திமிர்த்தனம்



**கொழும்பு, ஒக்ரோபர் 01**

**நாட்டில் தமிழ் மக்களுக்கென்று பிரச்சினைகள் எதுவுமில்லை. அவர்கள் தாமாகவே பிரச்சினைகளைத் தேடுகின்றார்கள். எனவே, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படவேண்டுமென்று வெளிவரும் கோரிக்கைகளை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம் - இவ்வாறு முன்னாள் அமைச்சரும் சிறிலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.** 11 ➤

## ஐஸ் போதை; இருவர் கைது

யாழ்ப்பாணம், ஒக். 1
ஐஸ் போதைப்பொருளுடன் மானிப்பாய் பகுதியில் 15 வயதுச் சிறுவன் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 10 ➤

ஹெரோய்னுடன்

## செல்வபுரத்தில் நால்வர் கைது!

யாழ்ப்பாணம், ஒக். 1
கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செல்வபுரம் பகுதியில், உயிர்கொல்லி போதைப் பொருளான ஹெரோய்னுடன் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று 10 ➤

யாழ்ப்பாணத்தில் இந்தவருடம்

## டெங்குத் தொற்றால் எட்டுப் பேர் உயிரிழப்பு!

2,548 பேருக்குப் பாதிப்பு; கட்டுப்பாடுகள் தீவிரம்!

விரிவு - பக். 11

வடமாகாண மக்களுக்கு

## சீனச் செஞ்சிலுவை 150,000 டொலர் உதவி!

கொழும்பு, ஒக். 1
சீனாவின் செஞ்சிலுவைச் சங்கம், வடக்கு மாகாணத்திலுள்ள உதவி தேவைப்படும் மக்களுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் டொலர் நிதி ஒதுக்கீட்டில் 11 ➤

இந்த வருடத்தில்

## இணையவிளையாட்டால் இரு சிறுவர்கள் இறப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 1
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த வருடம் இது வரையான காலப்பகுதியில் இரண்டு சிறுவர்கள் இணைய விளையாட்டால் (வீடியோ கேம்) உயிரிழந்துள்ள 11 ➤

## உயிர்கொல்லி ஹெரோய்ன்: வவுனியாவில் இருவர் கைது

வவுனியா, ஒக். 1
வவுனியாவில் இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின்போது உயிர்கொல்லியான ஹெரோய்னுடன் இரண்டு 10 ➤

## 'நிஜாம்' பாக்குடன் வந்த மாணவனுக்கு எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், ஒக். 1
ஊர்காவற்றுறைபொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலையொன்றில் கல்வி கற்கும் மாணவன் ஒருவன் நிஜாம் பாக்குடன் பாடசாலைக்கு வந்த நிலையில், 11 ➤

போதைப் பாவனைக்கு அடிமையென

## மாணவர்கள் சமூகத்தை கேவலப்படுத்துகிறார்கள்

### பத்திரிகைகளை கடித்துக் குதறுகிறார் கல்வி அமைச்சின் செயலர் வரதீஸ்வரன்

யாழ்ப்பாணம், ஒக். 1
பத்திரிகைகளைப் பார்த்தால் வெட்கமாக இருக்கின்றது. எமது சமுதாயத்தை கேவலப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் போதைப்பொருளுக்கு அடிமையான கூட்டம் என்று 11 ➤

## போதைப் பாவனையை மறைத்தால் இனிமேல் ஒழுக்காற்று நடவடிக்கை!

### வடமாகாண ஆளுநர் எச்சரிக்கை விவரங்களைத் திரட்டவும் பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1
வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்களிடையே போதைப்பொருள் பாவனையை மறைக்கும் அதிகாரிகளுக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள, விவரங்களைச் சேகரிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா 11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதையிலிருந்து சிறுவரைப் பாதுகாக்க பெற்றோரது தீவிர கண்காணிப்பு தேவை

## குழந்தைநல மருத்துவ நிபுணர் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஒக். 1**

**போதைப்பொருள் பாவனைக்குள் சிறுவர்கள் அடிமையாவதற்கு பிள்ளைகள் மீதான பெற்றோரது முறையான கண்காணிப்பின் மையே முக்கியமான காரணமாகும். பிள்ளைகளது எதிர்காலம் பெற்றோரின் கைகளிலேயே தங்கியுள்ளது.**

இவ்வாறு யாழ்.போதனா மருத்துவமனையின் குழந்தைநல மருத்துவ நிபுணர் எஸ்.அருண்மொழி தெரிவித்தார்.

யாழ்.போதனா மருத்துவமனை சமூகத்தினரால் நேற்றுமுன்தினம் போதைப்பொருள் பாவனைக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட விழிப்புணர்வுப் பேரணியின் பின் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வடக்கு மாகாணத்தில் உயிர்கொல்லியான ஹெரோய்ன் உள்ளிட்ட போதைப்பொருள் பாவனைக்கு சிறுவர்கள், மாணவர்கள் இலக்குவைக்கப்படும் கலாசாரம் பரவலடைந்து வருகின்றது. மருத்துவமனையில் போதைப்பொருளுக்கு அடிமையாகி சிகிச்சைக்காக சேர்க்கப்படும் சிறுவர்களது எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இது மிகவும் அபாயகரமானதாகும்.

எந்தச் சிறுபிள்ளையும் தவறிழைக்கின்றபோது அவர்களுடைய பெற்றோரே அதற்கு பொறுப்புக் கூறுபவர்களாக கருதப்படுவர். பிள்ளைகளைத் தண்டிப்பதற்கு சட்டத்தில் இடமில்லை.

பெற்றோரின் போதிய கண்காணிப்பு மற்றும் கவனயீனத்தாலேயே சிறுவர்கள் இந்தப் பிறழ்வுகளுக்குள் சிக்கிச் சீரழிகின்றனர்.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்களைத் தயார்ப்படுத்துவதில் காட்டப்படும் பெற்றோரது அக்கறை பின் குறைவடைகின்றது.

பெற்றோரின் கண்காணிப்பின்மை, கட்டுப்பாடின்மையால் பிற்காலத்தில் பெற்றோருடைய கருத்துக்களுக்கும் அவர்கள் மதிப்பளிக்காது செயற்படக்கூடிய சூழ்நிலை உருவாகுகின்றது.

மனித வளர்ச்சிப் பருவத்தில் பதின்ம வயதுப் பருவம் மிகவும் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகிறது.

இந்தக் காலத்தில் பெற்றோரது அன்பும் அரவணைப்பும் நெருக்கமான தொடர்பும் பிள்ளைகளை நல்வழிப்படுத்தும்.

தற்போது மாணவர்கள் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையின் பின் உடை, தலைமுடி அலங்காரங்களை மாற்றியமைத்து தனியே சுற்றுவதற்கு ஆரம்பிக்கின்றனர். இதன்போது பெற்றோர் அவர்கள் மீதான கண்காணிப்பை தீவிரமாக்கவேண்டும்.

பெற்றோர் இந்தச் சமூகத்துக்குப் பயந்தோ அல்லது அந்தஸ்துக்கு அஞ்சியோ பிள்ளைகளது தவறான நடத்தைகளை மூடி மறைத்து நடந்து கொள்வாராயின் பிள்ளைகளது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். ஆகவே, பெற்றோர் ஒரு சிறந்த பிள்ளையை இந்தச் சமூகத்துக்கு தருவதற்கு பிள்ளை வளர்ப்பு முறை களில் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் - என்றார். (ச-125)

# காலாவதியான பொருள்கள்: 11 வர்த்தகர்களுக்கு தண்டம்

யாழ்ப்பாணம், ஒக். 1



யாழ்.மாவட்டத்தில் காலாவதியான பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகர்களுக்கு யாழ். நீதிமன்று அபராதம் விதித்துள்ளது.

கடந்த 20, 21ஆம் திகதிகளில் யாழ்.மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் மாநகரசபைக்குட்பட்ட பலசரக்குக் கடைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போது வண்ணார்பண்ணை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் 10 பலசரக்குக் கடைகளிலும் நல்லூர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் ஒரு கடையிலும் காலாவதியான பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

அதனையடுத்து அவர்களுக்கு எதிராக யாழ். மேலதிக நீதவான் நீதிமன்றில் பொதுச் சுகாதார பரிசோதகர்களால் நேற்றுமுன்தினம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிவான் 11 கடை உரிமையாளர்களுக்கும் மொத்தமாக ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபா தண்டப் பணம் விதித்து தீர்ப்பளித்தார். (ச-26)

# யாழ்ப்பாணப் பொது நூலக சிற்றுண்டிச்சாலைக்கு 'சீல்'

யாழ்ப்பாணம்,

யாழ்ப்பாணப் பொதுநூலக சிற்றுண்டிச்சாலையை சீரமைக்கும் வரை, 'சீல்' வைக்குமாறு யாழ்.மேலதிக நீதவான் நீதிமன்று நேற்றுமுன்தினம் உத்தரவிட்டது.

யாழ்.பொது நூலக சிற்றுண்டிச்சாலை கடந்த செப்ரெம்பர் மாதம் 9 ஆம் திகதி யாழ்.மாநகர பொதுச் சுகாதார பரிசோதகரால் சோதனையிடப்பட்டது.

அதன்போது இனங்காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்ய சிற்றுண்டிச்சாலை நடத்துநருக்கு கால அவகாசம் வழங்கப்பட்டது.

மீண்டும் கடந்த 28 ஆம் திகதி சிற்றுண்டிச்சாலை மீள் பரிசோதனை செய்தபோது குறைபாடுகள் எவையும் நிவர்த்தி செய்யப்படாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

அதனையடுத்து பொதுச் சுகாதார பரிசோதகரால் சிற்றுண்டிச்சாலை நடத்துநருக்கு எதிராக யாழ். மேலதிக நீதவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

நீதிமன்றில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, சிற்றுண்டிச்சாலை நடத்துநர் குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டார். இதனால் சிற்றுண்டிச்சாலை நடத்துநருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன், சிற்றுண்டிசாலையை சீரமைக்கும் வரை 'சீல்' வைக்குமாறும் நீதிமன்று உத்தரவிட்டது. அதனையடுத்து யாழ்.மாநகர பொதுச்சுகாதார பரிசோதகரால் சிற்றுண்டிச்சாலை மறு அறிவித்தல் வரை சீல் வைக்கப்பட்டது. (ஒ-14,26)

# பிரதமரை மாற்ற பெரமுன முயற்சி

## *சன்ன ஜயசுமன எம்.பி சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஒக். 1



பிரதமர் பதவியில் மாற்றத்தை ஏற்படுத்த சிறிலங்கா பொதுஜன பெரமுனவினர் அவதானம் செலுத்தி வருகின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமன சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக பிரேரணை முன்வைக்கப்படவுள்ள நிலையில் அது தொடர்பில் அரசாங்கம் கூடிய அவதானம் செலுத்தாமல் பொறுப்பற்ற வகையில் செயற்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51 ஆவது கூட்டத்தொடர் தொடர்பில் உண்மை நிலைப்பாட்டை அரசாங்கம் பகிரங்கப்படுத்த வேண்டும்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை விடுத்து அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுகின்றமை முற்றிலும் தவறானதாகும். மக்களின் அபிலாஷைகளுக்கு அமைய அரசாங்கம் செயற்படாவிடின் நாட்டில் மீண்டும் மக்கள் போராட்டம் தீவிரமடையும்.

அதைவிடுத்து பிரதமர் தினேஷ் குணவர்த்தனவை பதவியில் இருந்து விலக்கி புதிய பிரதமரை நியமிக்க சிறிலங்கா பொதுஜன பெரமுன அவதானம் செலுத்தியுள்ளது. அரசியல் இலாபத்துக்காக பதவிகளில் மாற்றம் ஏற்படுத்த முயற்சிப்பதை விடுத்து மக்கள் எதிர் கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுகாண அரசாங்கம் அவதானம் செலுத்த வேண்டும் - என்றார். (ஒ-14,இ)



# பொருள்களின் விலையை குறைக்குமாறு ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 1

பொருள்களின் விலையை உடனடியாகக் குறைக்கக் கோரி கொழும்பில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

'பொருள்களின் விலையை குறை', 'எரிபொருள்களின் விலையைக் குறைத்து மக்களுக்கு நிவாரணம் வழங்கு' போன்ற கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜுபுர் ரஹ்மான் கலந்துகொண்டு ஆதரவு தெரிவித்தார். (ஒ-14,இ)

# மது விற்பனை நிலையம் அமைக்க அனுமதி வழங்கியமைக்கு எதிர்ப்பு




கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியை அண்மித்த பகுதியில், புதிதாக மதுபான விற்பனை நிலையம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டமைக்கு அந்தப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்து விற்பனை நிலையம் அமைக்க அனுமதி வழங்கிய இடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மது விற்பனை நிலையம் அமைக்க வழங்கிய அனுமதியை இரத்து செய்யுமாறு கோரி பதாதைகளை ஏந்தியவாறு மக்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

மதுபான விற்பனை நிலையம் அமைந்துள்ள பகுதியானது, பெண்கள் பாடசாலை அமைந்துள்ள பகுதி என்பதுடன், சிறுவர், பெண்கள் அதிகம் நடமாடும் பகுதி என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-14,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.வின் தீர்மானம் நாட்டுக்கு அபகீர்த்தி !

## வாக்கெடுப்பை கோருவோமென அலி சப்ரி தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 1**

**சிறிலங்கா தொடர்பாக சர்வதேச மனித உரிமைகள் பேரவையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரால் சமர்ப்பிக்கப்பட்ட புதிய தீர்மானம் தொடர்பில் சிறிலங்கா வாக்கெடுப்பைக் கோரும். இந்தத் தீர்மானம் எமது நாட்டின் கௌரவத்துக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஒன்று.**

இவ்வாறு சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானம் நியாயமற்றது. பொருளாதார நெருக்கடியின் போது நாட்டின் கௌரவத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் ஒன்று. இது எங்கள் அரசமைப்புக்கு எதிரானது. நாங்கள் இதனை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

குறித்த தீர்மானத்துக்கு எதிராக எங்கள் நண்பர்களை வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்வோம்.

மனித உரிமை தீர்மானத்தில் பொருளாதாரக் குற்றங்கள் என்ற சில விடயத்தை குறிப்பிட்டுள்ளனர். பல நாடுகள் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. மனித உரிமை பேரவை பொருளாதார நெருக்கடி குறித்து என்ன செய்கின்றது? - என்றார். (ச-இ)

# போதைத்தடுப்பு இணையவழி கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை குறித்து அறிந்துகொள்ள வேண்டியவை தொடர்பில் மாதாந்த கலந்துரையாடல் முன்னெடுக்கப் படவுள்ளது.

இன்று முதலாம் திகதி மாலை 6 மணிக்கு இணையவழியூடாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இதன்போது யாழ்.போதனா மருத்துவமனை உளநல மருத்துவ நிபுணர் மருத்துவர் சிவதாஸ் வளவாளராகக் கலந்துகொண்டு கருத்துரையாற்றவுள்ளார். (ச)

# போதைத் தாக்கம், வீட்டுத்தோட்ட விழிப்புணர்வு கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம், ஒக். 1

தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தொடர் சமூக நிகழ்வாக, தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பேசப்பட்டு வரும் போதைப்பாவனைத் தாக்கம் தொடர்பாகவும் தென்னையுடன் கூடிய வீட்டுத்தோட்ட செய்கையை ஊக்குவிக்கும் முகமாகவும் பல இடங்களில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய இன்று காலை 8 மணி முதல் 10 மணி வரை இளவாலை நல்லிணக்க மண்டபத்திலும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை அராலி சிறியம்மன் பகுதியிலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் முற்பகல் 10 மணி வரை மானிப்பாய் மருதடி நல்லிணக்க மண்டபத்திலும் பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 மணி வரை திருநெல்வேலி ஆன்மீக நல்லிணக்க மண்டபத்திலும் விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தலைமையில் இளவாலை, அராலி சிறியம்மன், மானிப்பாய் மருதடி மற்றும் திருநெல்வேலி ஆன்மீக அறக்கட்டளை ஆகியவற்றின் நிதி அனுசரணையுடன் விழிப்புணர்வு கருத்தரங்குகள் இடம்பெறவுள்ளன.

கருத்தரங்கில் அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள தென்னைப் பயிர்ச் செய்கையாளர்கள் கலந்துகொண்டு பயனடையுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கருத்தரங்கில் கலந்துகொள்ளும் பயனாளிகளுக்கு அந்தந்தப் பிரதேசஆன்மீக அறக்கட்டளை அமைப்பினரால் வீட்டுத்தோட்டச் செய்கைக்காக தென்னங்கன்றுகளும் காய்கறி விதைப் பைக்கற்றுக்களும் விநியோகிக்கப்படவுள்ளன என்று தென்னைப்பயிர்ச் செய்கைசபையின் யாழ்.பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்துள்ளார். (ஒ-14)






# யாழ்ப்பாணக் கல்லூரியில் மகாத்மா காந்தி நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 1

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மகாத்மா காந்தி விழா நேற்றுக் காலை கல்லூரி ஆரம்பப் பிரிவு பிரதான மண்டபத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் யாழ். இந்தியத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இதன்போது வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மாணவர்களால் யாழ்.நகரில் அமைந்துள்ள காந்தியின் திருவுருவச் சிலையடியில் இருந்து சைக்கிள் பவனி ஆரம்பிக்கப்பட்டு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியை சென்றடைந்தது.

அதனைத் தொடர்ந்து காந்தி விழா ஆரம்பிக்கப்பட்டு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் யாழ். இந்திய துணைத்தூதுவர் ராகேஷ் நட்ராஜ், தூதரக அதிகாரிகள், காந்தி சேவா சங்கத்தினர், கல்லூரியின் அதிபர் வண. கலாநிதி டி.எஸ் சொலமன் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-125)

# ஆர்ப்பாட்டக்காரரை ஊக்குவித்த அரசியல்வாதிகளுக்கு விசாரணை

கொழும்பு, ஒக். 1

அரசாங்கத்தைக் கவிழ்க்கும் முயற்சிகளில் ஈடுபடுமாறு ஆர்ப்பாட்டக்காரர்களை ஊக்குவித்த சில அரசியல்வாதிகள் குறித்து பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பதவி விலகியதன் பின்னர் நாடாளுமன்றத்தை ஆக்கிரமிக்குமாறும் புதிய ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பைத் தடுக்குமாறும் ஆர்ப்பாட்டக்காரர்களை கேட்டுக்கொண்ட சில அரசியல்வாதிகள் குறித்தே பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஜூலை மாதம் 9ஆம் திகதிக்குப் பின்னர் இரண்டாம் கட்ட விசாரணையாளர்களுக்குக் கிடைத்த தகவல்கள் தொடர்பில் அரசாங்கம் உயர் நீதிமன்றத்துக்கு தெரிவிக்கவுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் போலச் செயற்பட்டு குழுவொன்று நாடாளுமன்றத்தைச் சுற்றிவளைத்து அதனைக் கைப்பற்ற திட்டமிட்டிருந்தது.

புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பை தடுப்பதே இதன் நோக்கம் என விசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தக் குழுவினர் உயர்நீதிமன்றத்தையும் சுற்றிவளைக்கத் திட்டமிட்டதாலேயே கொழும்பில் உயர்பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப்பட்டன எனவும் விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஒ-14-இ)

# வவுனியா ஈரப்பெரியகுளத்தில் சர்வதேச கிரிக்கெட் மைதானம்

## கைவிடப்பட்டது தமிழர் பகுதி

வவுனியா, ஒக். 1

இலங்கை கிரிக்கெட் சபையால் பல கோடி ரூபா நிதியில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைப்பதற்கு ஈரப்பெரியகுளத்தில் காணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வவுனியா தாண்டிக்குளம் பகுதியிலுள்ள விவசாயப் பண்ணைக்குச் சொந்தமான பயன்படுத்தப்படாத பகுதியை மைதானத்துக்கு வழங்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்கு வவுனியா துடுப்பாட்டச் சங்கம் கடிதம் மூலம் வலியுறுத்தியிருந்தது.

எனினும், இதுதொடர்பில் அவர்கள் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தநிலையில் தற்போது வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஈரப்பெரியகுள பிரதேச செயலகத்தில் காணி ஒதுக்கப்பட்டு மைதானம் அமைப்பதற்கான பணிகள் இடம்பெறுகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் தீர்மானம் முட்டாள்தனமான செயல்!

## டி.யு.குணசேகர தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 1**

**நாடு வங்குரோத்து நிலை அடைந்து விட்டது. பெற்றுக் கொண்ட அரசமுறை கடன்களை மீளச் செலுத்த முடியாது என அரசாங்கம் சர்வதேசத்துக்கு அறிவித்தமை முட்டாள்தனமானதொரு தீர்மானமாகும். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்பதால் ஏற்படும் விளைவுகள் தொடர்பாக ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு அறிவிக்காமல் இருப்பது மிகப் பெரியதுரோகமாகும்.**

இவ்வாறு இலங்கை கம்யூனிச கட்சியின் உப தலைவர் டி.யு.குணசேகர தெரிவித்தார்.

இலங்கை கம்யூனிச கட்சி அலுவலகத்தில் கடந்த புதன்கிழமை நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வரலாற்றில் என்றுமில்லாத வகையில் நாடு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளது. சிறிலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்கு பிரதான காரணம் என குறிப்பிடுவதை மறுக்க முடியாது. தவறான பொருளாதார முகாமைத்துவம் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என விமல் வீரவன்ச, உதயகம்மன்பில ஆகியோர் எடுத்துரைத்த போது இவர்கள் அமைச்சரவையில் இருந்தால் நான் அமைச்சரவைக்கு வரமாட்டேன் என முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ச சிறுபிள்ளை போல் அடம்பிடித்தமையைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரை அமைச்சுப் பதவியில் இருந்து விலக்கினார்.

பொருளாதார நெருக்கடி இறுதியில் அரசியல் நெருக்கடியாக தீவிரமடைந்து எவரும் எதிர்பாராத வகையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தி, மக்களால் புறக்கணிக்கப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆட்சியதிகாரத்தை பெற்றுக்கொடுத்தது. பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண அரசாங்கம் இதுவரை பொருத்தமான நடவடிக்கையும் முன்னெடுக்கவில்லை.

விவசாயத்துறை வீழ்ச்சிய டைந்தால் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்தது. விவசாயத்துறையை மேம்படுத்த அரசாங்கம் எவ்வித திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை. மாறாக பொருளாதார நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் இறக்குமதி துறையை மாத்திரம் அரசாங்கம் நம்பியிருக்கிறது - என்றார். (எ-இ)




முல்லை மருத்துவமனைக்கு

## ஹற்றன் நஷனல் வங்கியால் இதயத்துடிப்பு பதிவு இயந்திரம்

முல்லைத்தீவு, ஒக். 1

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு ஹற்றன் நஷனல் வங்கியின் நிதியனுசரணையில் இதயத்துடிப்பு பதிவு இயந்திரம் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையின் பொருளாதார வளத்தை மேம்படுத்திக்கொள்ளும் நோக்கிலும் நோயாளர்களது சிகிச்சையை இலகுபடுத்தும் நோக்கிலும் இந்த இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 27 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனை பணிப்பாளரிடம் ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய கடன் மற்றும் வியாபார சிரேஷ்ட முகாமையாளர் மற்றும் நுண்நிதி முகாமையாளர் ஆகியோர் கையளித்தனர். (ச-19)

# தகவல்களை அறியும் உரிமையை உதாசீனம் செய்தால் நடவடிக்கை!



யாழ்ப்பாணம், ஒக். 1

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் உதாசீனப்படுத்தப்பட்டால், அது குறித்த அனைத்துச் சம்பவங்களும் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்படவேண்டுமென்று தகவல் அறியும் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

உலகளாவிய தகவல் அணுகலுக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு, இலங்கையின் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு, கடந்த 28ஆம் மற்றும் 29ஆம் திகதிகளில் யாழ்ப்பாண மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி பத்திரிகைக் கழகங்கள் மற்றும் வடமாகாணக் கல்வியியலாளர்களுடன் இணைந்து கலந்துரையாடலை நடத்தியது.

இதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் பேசிய சமூகப் பிரதிநிதிகள், 'தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட ஆணைகள், நில விவகாரங்கள், பொது நிதி முகாமைத்துவம் தொடர்பான நிர்வாகப் பிரச்சினைகள், ஊழல்களை வெளிப்படுத்துவதில் அரச நிறுவனங்களின் முறையான தொழிற்பாடு போன்ற பல்வேறு வழக்குகளில் தகவல்களை வெளியிடுவதற்கு வழிவகுத்தது' என்றும் அதேநேரம் தகவல் கோரிக்கையை செயற்படுத்தும் வகையில் பகிரங்க அதிகாரசபை இன்னும் திறமையாகச் செயற்படவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தும்போது, சில பகிரங்க அதிகாரசபைகளால் ஊக்கமளிக்கப்படாத நிகழ்வுகளையும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

அதேநேரம், தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில், சில அரச அலுவலகங்களில் முறையாகச் செயற்படும் தகவல் உத்தியோகத்தர்கள் இல்லை என ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டினர். பகிரங்க அதிகாரசபைகள் தகவல் கோரிக்கையை கவனிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை என்பதை ஊடகவியலாளர்கள் அடிக்கோடிட்டதுடன் அது தொடர்பில் ஆணைக்குழுவும் அது தொடர்பில் இந்த விவகாரங்கள் குறித்து ஆராய ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்குமாறும் வேண்டிக் கொண்டனர். அதிக எண்ணிக்கையிலான வழக்குகளில் தகவல்களை வெளியிடும் ஆணைக்குழுவின் பணியைப் பாராட்டினாலும், பகிரங்க அதிகாரசபையின் தகவல் கோரிக்கையை புறக்கணிக்கும் போக்கு தொடர்ந்தால், தகவல் அறியும் சட்டம் குடிமக்களுக்கு சிறியளவிலேயே பயன்படும் என்றும் ஊடகவியலாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதையடுத்தே தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும் விண்ணப் பங்கள் உதாசீனப்படுத்தப்பட்டால், அது குறித்த அனைத்துச் சம்பவங்களும் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்படவேண்டு மென்று தகவல் அறியும் ஆணைக்குழு வலியுறுத்தியது. (ம-26)



## யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி புதிய வகுப்பறைக் கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரியில் புதிய வகுப்பறைக் கட்டடத் தொகுதி நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது. 'அண்மையிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை' எனும் தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் இந்த வகுப்பறைக் கட்டடத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் வாசுகி தவபாலன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-125)



வலிகாமம் பிரதேசசபைக்குட்பட்ட சத்தியக்காடு மீன், கோழி இறைச்சி மற்றும் கருவாட்டு சந்தைக் கட்டடத் தொகுதி மக்கள் பாவனைக்காக வலி. மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரனால் நாடா வெட்டி அண்மையில் கையளிக்கப்பட்டது. ரூபா 10.91மில்லியன்செலவில்பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் இந்த கட்டடம் அமைக்கப்பட்டது. (ய-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவையும் உயிர்கொல்லிகளே!

போதைப்பொருள் பாவனை தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள் பரவலாக பல மட்டங்களிலும் முன்னெடுக்கப்படத் தொடங்கியுள்ளன. போதைப்பொருள் பாவனை சட்டத்துக்குப் புறம்பானது என்பதோடு, உயிராபத்தையும் உண்டுபண்ணி, சமூகத்தையே சீரழிக்கவல்லது என்பதால், அதுகுறித்து அதிக அக்கறையும், கண்காணிப்பும் நம்மிடையே உண்டு. ஆனால், கஞ்சா, ஹெரோய்ன் போன்ற போதைப் பழக்கத்தைப்போன்று மிக மோசமான இன்னொரு போதைப் பழக்கமொன்றுக்கு நம் இளைய சமுதாயம் அடிமைப்பட்டு நீண்டநாள்களாகிவிட்டது. அந்தப் புதியவகைப் போதை வேறொன்றுமில்லை, அலைபேசிகளூடாக அறிமுகமாகிய இணையவழி விளையாட்டுக்களும், பொழுதுபோக்குச் செயலிகளுமே.

விரிந்து – பரந்துள்ள இணைய உலகமும், அதன் ஊடாக அறிமுகமாகிக் கொண்டிருக்கும் சமூகச் செயலிகளும், விளையாட்டுக்களும் எமது இளம் சமூகத்தை வலிந்து இழுக்கின்றன. போரின் பின்னரான காலமும், அதன் பின்னரான எமது தாயகச் சூழலும் கட்டுமட்டில்லாத – கண்காணிப்பு இல்லாத – இணையப் பாவனைக்கு வழி திறந்து விட்டுள்ளன. அதனை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துவதில் மாணவ சமுதாயம் முன்னிலையில் இருந்தாலும், அதனையும்விட இணையப்பாவனை மற்றும் இணைய விளையாட்டுக்கள், பொழுதுபோக்குச் செயலிகள் மூலம் உண்டாகும் பாதகங்களே அதிகமாக வெளிக்கிளம்புகின்றன.

ஆழ்கடல்களிலே இருக்கும் பனிப்பாறைகளைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவற்றின் மேல்முனை மட்டுமே கடல் நீருக்கு மேலால் வெளித்தெரியும். அந்த முனையை மட்டுமே அதன் உண்மையான பருமன் எனக் கணித்து கப்பல்களைச் செலுத்தினால் அவ்வளவுதான். கப்பல் சுக்குநூறாகிவிடும். ஏனெனில் பனிப்பாறைகள் வெளியே நீட்டிக் கொண்டிருப்பதைக் காட்டிலும், நீருக்கு அடியில்தான் அவற்றின் உண்மையான உருவம் மிகப்பிரமாண்டமாக ஒளிந்திருக்கும். "டைட்டானிக்" என்ற கப்பலும், இப்படி பனிப்பாறையின் முனையை நம்பி மோசம்போன கப்பல்களில் ஒன்றுதான். இவ்வாறு பனிப்பாறையின் முனைபோலவே, மருத்துவத்துறை வெளியிடும் புள்ளிவிவரங்களும் இருக்கின்றன. கடலினுள் ஒளிந்திருக்கும் மிகப்பெரிய பனிப்பாறை போன்று உண்மை எண்ணிக்கை தெரிவதில்லை– வெளிவருவதில்லை.

'ரிக்ரொக்' என்ற பொழுதுபோக்குச் செயலிக்கு அடிமையான சிறுமிகள் 10 பேர் வரையில் வடக்கில் உள நல சிகிச்சைக்கு உட்படுகின்றனர் என்ற தகவல் வெளியாகியிருக்கின்றது. இதோடு இன்னொரு அதிர்ச்சியான தகவலையும் மருத்துவத் துறையினர் தெரிவிக்கின்றனர். இந்தச் செயலி ஊடாக ஆண்களுடன் நட்பாகி கால ஓட்டத்தில் அவர்கள் காதலிப்பதாக நம்ப வைக்கப்பட்டு துஷ்பிரயோகத்துக்கும் உட்படுத்தப்படுகின்றனர் என்று கூறப்படுகின்றது. கடந்த 6 மாதங்களாக இத்தகைய சம்பவங்கள் அதிகளவில் நடைபெற்றுள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர். இந்தியா உள்ளிட்ட, உலகில் பல நாடுகள் 'ரிக்ரொக்' செயலியைத் தடைசெய்துள்ளன. அதன் ஆபத்தை உணர்ந்து குறித்த நாடுகளால் எடுக்கப்பட்டுள்ள இதேபோன்ற நடவடிக்கைகளை இலங்கையிலும் முன்னெடுக்கவேண்டும்.


முன்னைய காலங்களில் விளையாட்டு மைதானங்களைச் சுற்றிச்சுற்றி வந்த இளம் சமூகம் இன்று கைபேசிக்கு அடிமையாகி, அதற்குள்ளேயே – இணைய விளையாட்டுக்குள்ளேயே – குனிந்த தலை நிமிராமல், கண் துஞ்சாமல் மூழ்கியிருக்கின்றது. முன்னரைப்போன்று அவர்களை மைதானங்களை நோக்கி நகர்த்த வேண்டும். இல்லையேல் இணைய விளையாட்டுகளாலும் விபரீதங்களைச் சந்திக்கவேண்டியிருக்கும். சில வருடங்களுக்கு முன்னர் 'நீலத் திமிங்கிலம்' என்ற இணைய விளையாட்டு, உலகெங்கும் நூற்றுக்கணக்கான இளையோரின் சாவுக்கு காரணமானதை அத்தனை இலகுவாக மறக்கமுடியாது. இணைய விளையாட்டுக்கள் காரணமாக, ஒருவருட காலத்துக்குள் இரண்டு உயிர்கள் யாழ்ப்பாணத்தில் இழக்கப்பட்டிருக்கின்றன. உயிர்கொல்லி போதைப் பொருளான ஹெரோய்ன் போன்று இவையும் ஒருவகை உயிர்கொல்லிகளே. ஹெரோய்ன் பாவனையாக இருக்கலாம், இணைய விளையாட்டுக்களாக இருக்கலாம், பொழுதுபோக்குச் செயலிகளாக இருக்கலாம் எதுவாக இருந்தாலும் இந்த ஆபத்தான உயிர்கொல்லிகளிடம் இருந்து எங்கள் இளம்



**நாளொரு நல்வார்த்தை**

“ மனம் அழகாக இருந்தால், காணும் காட்சிகளும் அழகாகவே இருக்கும் ”

- சோக்ரடீஸ்




# ராஜபக்சக்கள் தோற்கவில்லை நிச்சயமாக மீண்டெழுவார்கள்

## சுப்பிரமணியன் சுவாமி தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 1**

**“நீங்கள் தோற்கவில்லை. நீங்கள் மீண்டெழுவீர்கள்’ இவ்வாறு முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச ஆகியோரிடம் நேரில் தெரிவித்தார் இந்திய பாரதிய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினர் கலாநிதி சுப்பிரமணியன் சுவாமி.**

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தலைமையில் நவராத்திரிப் பூஜை சிறப்பு வழிபாடு கடந்த புதன்கிழமை அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. இந்தச் சிறப்பு வழிபாட்டில், இந்திய அமைச்சரவை முன்னாள் அமைச்சரும் இராஜ்யசபாவின் முன்னாள் உறுப்பினருமான கலாநிதி சுப்பிரமணியன் சுவாமி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வின் பின்னர் முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்ச ஆகியோருடன் நட்பு ரீதியான பேச்சு நடத்தியபோதே சுப்பிரமணியன் சுவாமி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

‘மக்கள் ஆணை பெற்று ஆட்சியில் வீறு கொண்டு நடந்த ராஜபக்சக்கள் ஏன் திடீரெனப் பதவிகளைத் துறந்தார்கள் என்பது இன்னமும் மர்மமாகவே உள்ளது. அதற்கான பதிலை உங்களிடம் (மஹிந்த ராஜபக்ச, கோத்தா) நான் கேட்க விரும்பவில்லை. ஆனால், நீங்கள் தோற்கவில்லை; நீங்கள் மீண்டெழுவீர்கள். இது உறுதி’ - என்றார். (ஓ-22)

# ரணில் - ராஜபக்ச அரசாங்கம் ஒருபோதும் தீர்வைத் தராது

## சஜித் மீண்டும் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 1

தேசிய பிரச்சினைக்கு ரணில், ராஜபக்ச அரசு ஒருபோதும் தீர்வைக் காணமாட்டாது. மக்களை ஏமாற்றும் வகையில் கருத்துக்களை வெளியிட்டுக் காலத்தை இழுத்தடிப்பதுதான் இந்த அரசின் நோக்கம் - இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

‘தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் தமிழ், முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு விரைவில் பேச்சை ஆரம்பிக்கும்’ என்று பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்திருந்தார். இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

‘ரணில், ராஜபக்ச அரசு விரைவில் கவிழப் போகின்றது. இந்நிலையில், ஏதோவொரு வழியில் ஆட்சியைத் தக்கவைப்பதற்காகவே தேசிய பிரச்சினைகளுக்கு விரைந்து தீர்வு என்று கூறி மக்களை இந்த அரசு ஏமாற்றி வருகின்றது. தீர்வு விடயம் தொடர்பில் பேச்சு விரைவில் ஆரம்பம் என்று ஜனாதிபதி பிரிட்டன் உள்ளிட்ட வெளிநாடுகளுக்குச் சென்று புலம்பெயர் இலங்கையர்களிடம் பொய்யுரைக்கின்றார். அவரின் பாணியில் பிரதமர் உள்நாட்டிலிருந்து பொய்யுரைக்கின்றார்’ - என்றார். (ஒ-22)

**நாளை**

02.10.2022
ஞாயிற்றுக்கிழமை
புரட்டாதி - 15


சுபநேரம் : 09.02 - 10.32
ராகுகாலம்: 04.32 - 06.02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உலகம் சிறுவர்களுக்கே...

■ நற்குணலிங்கம்
நெல்லியடி



சிறுவர்கள் பெறுமதிமிக்க செல்வங்கள், நாட்டின் எதிர்கால வலுவான முதுகெலும்புகள், எதிர்கால மனிதவளங்கள், உலகை செதுக்கவுள்ள சிற்பிகள், நாளைய உலகை ஆள தம்மை தயார்படுத்துபவர்கள், இன்றைய அரும்புகள். எனவே இவர்கள் உரமிட்டு, அடித்தளமிட்டு, தம் உரிமைகளை அனுபவிக்கக்கூடிய வகையில் வளர்த்தெடுக்கப்பட வேண்டியவர்கள். இவர்களது முக்கியத்துவம் உணரப்பட்டதால் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் முதலாம் திகதி (இன்று) சிறுவர்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. பெற்றோரால், ஆசிரியரால் பிள்ளைகள் அவதானமாக வளர்க்கப்படவேண்டியவர்கள். குறைகூறி வளர்க்கப்படும் சிறுவர்கள் வெறுக்கக் கற்றுக்கொள்ளும், அடக்கி வளர்க்கப்படும் பிள்ளைகள் சண்டையிடக் கற்றுக்கொள்ளும். கேலிக்கு உட்படும் பிள்ளைகள் வெட்கத்துடன் வளரும், அவமானத்துக்குட் படுவோர் குற்றவாளிகளாகவும், ஊக்குவிக்கப்படுவோர் மனவலிமையுடனும் வளருகிறார்கள். ஒவ்வொரு குழந்தையையும் நல்ல நிலையில் உலகுக்கு ஒப்படைக்க வேண்டியது நமது பொறுப்பு. அதற்கமைய "தைரியமாக முன்னோக்கி செல்வதற்காக நமது சிறார்களைப் பலப்படுத்துவோம்" என்பதே இன்றைய சிறுவர்தின தொனிப்பொருளாகும்.

சிறுவர்களது உரிமைக்கு நாம் மதிப்பளிக்க வேண்டும். சிறுவர்கள் தமக்கான உரிமைகள் பற்றி அறிந்திருந்தால் தான் அவர்களது உரிமைகள் மீறப்படுவதை அவர்களால் அறிந்துகொள்ள முடியும். பெற்றோரின் பாதுகாப்பைப் பெறும் உரிமை, வாழ்வதற்கான உரிமை, கருத்துக்களை வெளியிட, தன்னைப் பாதிக்கக்கூடிய விடயம் தொடர்பான அபிப்பிராயங்களை வெளியிட, பாதுகாப்பைப் பெற, சுகாதார சேவைகளைப் பெற்றுக்கொள்ள, கல்விகற்க, பாலியல் துஷ்பிரயோகங்களிலிருந்து பாதுகாக்கும் உரிமை, பிறிதொரு நாட்டுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்கும் உரிமை, அச்சுறுத்தலுக்கு உட்படாதிருக்க, அநாதரவுக்கு உட்படாதிருக்க, போதையிலிருந்து விலகிக்கொள்ள, மத சுதந்திரம், அந்தரங்கத்தைப் பேணும் உரிமை, ஆயுத கலாசாரத்துக்கு உட்படாதிருக்க, புறக்கணிப்பிலிருந்து பாதுகாப்பைப் பெற என பல்வேறு உரிமைகள் 1989 ஆம் ஆண்டு ஐ.நா.சபையால் பிரகடனப்படுத்தப்பட்டது. அது 1990 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது. அதை 1991 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12 ஆம் திகதி இலங்கையும் ஏற்றுக்கொண்டது. ஒவ்வொரு பிள்ளையும் தனித்துவமான பிள்ளைகள். அவர்களது தனித்துவமான ஆற்றல்கள் உச்ச அளவில் விருத்தி செய்யப்பட வேண்டும். பெற்றோர் பிள்ளைகளைப் பொறுப்பாக வளர்க்க வேண்டும். இன்று பிள்ளைகளை வளர்ப்பதில் பல பெற்றோர் இடர்படுகின்றனர். அதனால் அவர்களுக்கு மட்டுமல்ல, பாடசாலை, சமூகம் எனப் பலதரப்பட்டவர்களுக்கு பிரச்சினையாகத்தான் இருக்கின்றது. சிறுவர்கள் கடத்தப்படுதல், போதைக்கு அடிமையாதல், துஷ்பிரயோகத்துக்கு உள்ளாதல் , அவசியமற்ற உடற்தொடுகை, குடும்ப வன்முறை, துன்புறுத்தல், வேலைக்கு அமர்த்துதல், பாடசாலைக்கு செல்லவிடாது தடுத்தல் எனப் பல கஷ்டங்களுக்கு சிறுவர்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. சிறுவர்களை அவர்களது இயல்புக்கும் தன்மைகளுக்கும் முரணான வகையில் தவறாகப் பயன்படுத்துவது உடன்நிறுத்தப்பட வேண்டும். சிறுவர்களது உரிமைகள் பலப்படுத்தப்படுமாயின் துஷ்பிரயோகங்கள் குறைவடைய சாத்தியக்கூறுகள் அதிகம். பிள்ளை பெற்றோருடன் அல்லது தனக்கு நம்பிக்கையான ஆசிரியருடன் மனம்விட்டுக் கதைக்கக்கூடிய வகையில் உறவு பேணப்படின் மீறல்கள் வெளிவர, நிவர்த்தி பெற வாய்ப்புக்கள் அதிகம்.




80 வீதமான சிறுவர்கள் அறியாமையால் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகிறார்கள். 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை சிறுவர்களுக்கு எதிரான வன்முறை தொடர்பான முறைப்பாடுகள் ஆயிரத்துக்கு மேல் பதிவாகியுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் போதைக்கு அடிமையாகி இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றது. அதிபர், ஆசிரியர்களாலும் சிறுவர்கள் வன்முறைக்கு உள்ளாகின்றனர். நாட்டில் நாளாந்தம் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பல பதிவாகின்றன. ஒரு நாட்டின் நாகரிகத்தின் வளர்ச்சியானது சிறுவர்களின் உரிமைகளை அங்கீகரிப்பதன் அடிப்படையிலேயே அளவிடப்படுகின்றது.

எனவே, இவ்வாறான நிலையில் பிள்ளைகளைக் கஷ்ரம் தெரியாமல் வளர்ப்பது பிள்ளைகளுக்கு நீங்கள் செய்யும் துரோகமாகும். இன்றைய சூழலில் பிள்ளை வளர்ப்பு என்பது ஒரு கலையாகவே பார்க்கப்பட வேண்டும். அது ஒரு இலேசான விடயமல்ல. மிகவும் நேர்த்தியாகச் செய்யப்படவேண்டியது. பொருத்தமற்ற கட்டுப்பாடுகள், தண்டனைகள், கல்விக் கணிப்புக்கள், கடுமையான எச்சரிக்கைகள் தவிர்க்கப்பட்டு சிறுவர்கள் மீது அன்பை விதைத்து அறுவடையைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் பெண் குழந்தைகளைப் பாதுகாப்பாகவும், ஆண் குழந்தைகளைப் பொறுப்புள்ளவர்களாகவும் வளர்த்து பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பிரகாசமாக்குவது எம் அனைவரினதும் பொறுப்பாகும். ■

# அனைவரையும் வழிநடத்துபவர்களே முதியோர்



முதுமையும், இறப்பும் மனிதன் சந்திக்கும் தவிர்க்க முடியாத நிலைகளாகும். 60 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் முதியவர்களே. முதியவர்கள் அனுபவங்களின் அமுத சுரபிகளாவர். வார்த்தைகள் தடுமாறினாலும் வாழ்க்கை தடுமாறாமல் வழிகாட்ட வல்லவர்கள் முதியவர்களாவர். இன்றைய நவீன உலகில் முதியோரின் முக்கியத்துவம் உணரப்படுவதில்லை. இது துரதிர்ஷ்டமானது. முதியோரைப் பேணிப்பாதுகாப்பதை இளைய சமுதாயம் தங்களது கடமைகளில் ஒன்றாக ஏற்க வேண்டும். இந்தப் பின்னணியில் சர்வதேச முதியோர் தினம் என்பது உலகெங்கிலுமுள்ள முதியவர்கள் அல்லது மூத்த குடிமக்களுக்கு ஒரு சிறப்பு நாளாகும். 1982 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் முதியோர் தினம் அங்கீகரிக்கப்பட்டது. அதற்கமைய 1990 ஆம் ஆண்டு, ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை ஒக்ரோபர் முதலாம் திகதியை சர்வதேச முதியோர் தினமாகப் பிரகடனப்படுத்தியது. இந்த நிலையில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு தலைப்பை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டு உலகளாவிய ரீதியில் உலக முதியோர் தினத்தைக் கொண்டாடி வருகின்றது.

நமது சமுதாயத்தில் மூத்த குடிமக்களின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை பரப்புவதற்கும், சமூகத்துக்கு முதியவர்கள் செய்யும் பங்களிப்புகளை மதிப்பதற்கும், அதைப் பாராட்டுவதற்கும் இந்த நாள் கொண்டாடப்படுகின்றது. முதியோர்களுக்கான சுகாதார ஏற்பாடுகள் மற்றும் சமூக அக்கறையின் அவசியம் குறித்த விழிப்புணர்வை பரப்புதல், வயதானவர்களை பாதிக்கும் பிரச்சினைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு உலக முதியோர் தினம் உருவாக்கப்பட்டது. வீட்டில், சமுதாயத்தின் தலைவர்களாக தங்கள் தோள்களில் நிறைய பொறுப்புகளை சுமக்கிறார்கள். இவர்கள் சமூகத்தின் மரபுகள், கலாசாரம் போன்றவற்றை அடுத்த சந்ததியினருக்குக் கடத்துகின்றார்கள். மற்றும் இளைய தலைமுறையினருக்கு அறிவை வழங்குகிறார்கள். இத்தகைய முதியோர்கள் வறுமையால் பாதிக்கப்படுகின்றனர், உடல்நலப் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர், சில சமயங்களில் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகின்றனர். இவற்றைத் தடுப்பதற்கு மக்கள் மத்தியில் விழிப்புணர்வு தேவை. இதற்கு உலக முதியோர் தினம் முக்கியம் பெறுகின்றது.

முதியோர்கள் அறிவும் ஆற்றலும் கொண்டவர்கள். பலதுறைகளில் அனுபவம் கொண்டவர்கள். இவர்களது அறிவும், ஆலோசனைகளும் இன்றைய இளைய சமுதாயத்தினருக்கு அவசியமாகும். மூத்த குடிமக்கள் என்று பெருமையாகப் பேசப்படும் முதியோரை அன்பு, பாசம், நேசத்துடன் கண்ணியமாகவும், கௌரவமாகவும் நடத்தப்படவேண்டும் என்பதை நினைவுபடுத்தும் முதியோர் தினத்தில் மட்டுமல்லாது என்றென்றும் அவர்களை மதிக்கவும், அன்பு காட்டவும், கௌரவப்படுத்தவும் முன்வர வேண்டும். முதியவர்களை எமக்கு வழிகாட்டியாகவும், நம்மை ஈன்றெடுத்தவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கும் விதமாகவும் பேணிப்பாதுகாப்பது நமது கடமையாகும் என்று உறுதியேற்பதுமே முதியோருக்கு நாம் செலுத்தும் நன்றிக்கடனாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூசகர் தேவை

**துணவி அரசப்பிள்ளையார் கோவிலுக்கு நித்திய பூசை**

செய்வதற்கு முன் அனுபவம் உள்ள பூசகர் தேவை.
சம்பளம் பேசி தீர்மானிக்கலாம்.

**துணவி**
**அரசப்பிள்ளையார் கோவில்**
**துணவி வட்டுக்கோட்டை.**

**சு.துஷாந்தன்**
செயலாளர்
**077 416 2295**

(cs.46846) (2.6)

## ஏக்கத்தோடு கழிந்த 13ஆம் ஆண்டு நினைவுகள்

எங்களுக்காக 15 . 04 . 1949

இறைவனுக்காக 24 . 09 . 2009



### அமரர் கந்தசாமி தங்கராசா (பக்தர்)

**திதி: 01.10.2022 பூர்வபக்க ஷஷ்டி**

எங்கள் ஆசை அப்பாவே!
நீங்கள் எங்களை கண்ணீரில் தவிக்க
விட்டுச் சென்று 13 வருடங்கள் ஆகிவிட்டதே அப்பா
- தாங்க முடியவில்லையே
உங்கள் பிரிவை உங்கள் படத்தைப் பார்த்து நித்தமும்
- நாங்கள் சிந்தும் கண்ணீர்
உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா ? அப்பா

**601, கே.கே.எஸ். வீதி,**
**நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.**

உங்கள் நினைவுகளோடு
**குடும்பத்தினர்**

(cs:21020 (2.6))

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் துரைராஜா தவமணி

**தோற்றம்** 05.04.1937 **மறைவு** 01.09.2022

அன்னை என்ற சொல் மிளிர
ஆறு பிள்ளைகளை பெற்றெடுத்து
இல்லறத்தை நல்லறமாய் வாழ்ந்து
ஈகை குணங்களை இதயத்தில் அமர்த்தி
உண்மையே உறைவான உள்ளம்கொண்டு
ஊரார் போற்றி புகழ்ந்திட வாழ்ந்து
என் எண்ணம் தந்தை வழி எனக் கொண்ட
எம் அன்னையே
ஏங்கியே தவிக்கவிட்டுச் சென்றதேனோ?
**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

**நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்**

(cs.21000) (2.6)

## பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.

**077 262 6944**

## செம் மண் தேவை

யாழ். மாவட்ட பிரதேசத்தில் தோட்டத்துக்கு உகந்த செம் மண் உடன் தேவை.
(டிப்பர் லொறி)

**076 287 8655**

(cs 21029) (2.6)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1984 இல் பிறந்த, கொழும்பில் சுயதொழில்புரியும் மணமகனுக்கு படித்த பண்புள்ள மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

**077 396 0224, 021 225 5169**

(cs 20981) (2.6)

## 'சத்தியமும் சாத்தியமும்' தொகுப்பு வெளியீடு

யாழ், ஒக். 1

கொற்றை பி.கிருஷ்ணானந்தனின் 'சத்தியமும் சாத்தியமும்' கலை இலக்கியக் கட்டுரைத் தொகுப்பு வெளியீட்டு விழா, இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கொற்றாவத்தை பூமகள் சனசமூக நிலைய மண்டபம், தெணியான் அரங்கில் இடம்பெறவுள்ளது. நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை யாழ்ப்பாணம் தேவரையாளி இந்துக்கல்லூரி ஆசிரியர் க.தர்மதேவன் ஆற்றவுள்ளார். (ஓ-14)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

### வினாசித்தம்பி காசிலிங்கம்

(முன்னாள் பங்காளர்- No.1,மதுபானச்சாலை)

**திதி: பூர்வசஷ்டி (01.10.2022)**



அன்பிற்கோர் இலக்கணமாய்
பண்பிற்கோர் இருப்பிடமாய்
பாரினிலே எமை
- விட்டுச்சென்றாலும்
ஆறாது எம்துயரம்

**மனைவி, பிள்ளைகள், குடும்பத்தினர்.**

**64/4 A, பொற்பதி வீதி, கொக்குவில்.**

(cs 21027) (2.6)

## கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர், யாழ்ப்பாணம் வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் **தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள **கேள்விதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர், யாழ்ப்பாணம் (தொலைபேசி இல: -021-205 8867, தொலைநகல்: 021-205 8866)**இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை 16.00 மணிவரை 2022.10.03 ஆம் திகதியில் இருந்து 2022.10.17 ஆம் திகதி வரையான வேலை நாட்களில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், பெறுகைக்குழு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் இடத்திலிருந்து 2022.10.03 ஆம் திகதியிலிருந்து 2022.10.17 ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர் பெறுகைக்குழு , வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, பருத்தித்துறை வீதி புத்தூர் யாழ்ப்பாணம்** எனும் முகவரிக்கு 2022.10.18 ஆம் திகதி மு..ப 11.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பிணை வைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(13)/2 /Council/PI/01/ 2022 | நீர்வேலி சிறுவர் பூங்கா நிலம் மட்டப்படுத்துதல் | 0.85 | 60 நாட்கள் | C-9 அல்லது அதற்கு மேல் | 49 நாட்கள் (2022.12.06) | 8,520.00 | 2023.01.03 |
| NP/14/41(13)/2 /Council/PI/02/ 2022 | கோப்பாய் உப அலுவலகத் திருத்தம் கட்டம் 1 | 1.5 | 60 நாட்கள் | கட்டிடம் C-9 அல்லது அதற்கு மேல் | 49 நாட்கள் (2022.12.06) | 15,100.00 | 2023.01.03 |

09. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் வலிகிழக்கு பிரதேச சபை மாநாட்டு மண்டபத்தில் 2022.10.10 ஆம் திகதி மு.ப.11.30 மணிக்கு நடைபெறும். இக்கூட்டத்தில் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கலந்து கொள்ளலாம். இதற்கு எதுவித கொடுப்பனவுகளும் வழங்கப்படமாட்டாது.

**தியாகராஜா நிரோஷ்**
**தலைவர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்,**
**யாழ்ப்பாணம்.**
**2022.10.01**

(cr.37597(2.6))

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மலர்வு
09
12
1936



மறைவு
29
09
2022

## திருமதி. புஷ்பலட்சுமி சுப்ரமணியம்
### (இளைப்பாறிய விவசாய போதனாசிரியர்)

யாழ். காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் நாவலடிக்கேணியை வதிவிடமாகவும் தற்போது தெஹிவளை 21/1, பிரேசர் அவனியுவை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த புஷ்ப லட்சுமி சுப்பிரமணியம் அவர்கள் 29.9.2022 வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான கந்தையா வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தையா சுப்பிரமணியம் (இளைப்பாறிய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், வசந்தமலர் (இலங்கை), மகேந்திரராஜா (கனடா), சண்முகராஜா (லண்டன்), கனகமலர் (இலங்கை), ஜெயராஜா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பாலகுமார், பானுமதி, அனுஷா, கௌரி ஆகியோரின் மாமியாரும் நிரஞ்ஜனி, கஜேந்திரன், துளசி, சிவாஸ்கர், டிலானி, டிலக்ஷன், அக்ஷரன், அட்ஷயன் ஆகியோரின் அனபுப் பேத்தியுமாவார். அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் பாக்கியலட்சுமி, உருத்திரமூர்த்தி, காலஞ்சென்ற பகவதியம்மாள் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், மனோன்மணி, ஏனாதிநாதன் மற்றும் கனகசபாபதி, சோதியம்பாள் ஆகியோரின் மைத்துனியுமாவார். அன்னாரின் பூதவுடல் 01.10.2022 சனிக்கிழமை அன்று கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் மாலை 4.00 மணி முதல் இரவு 8.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரிகைகள் 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.00 மணி முதல் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கல்கிசை மயானத்திற்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல் :- குடும்பத்தினர்

மகேந்திரராஜா (கனடா) : - (+1) 4163322971
சண்முகராஜா (லண்டன்) : - (+44) 2084224673
ஜெயராஜா (லண்டன்) : - (+44) 7725545677
வசந்தலர் (இலங்கை) : - (+94) 776609054
கனகமலர் (இலங்கை) : - (+94) 713777355

# மரண அறிவித்தல்



மலர்வு
09
.
10
.
1934

உதிர்வு
28
.
09
.
2022

## திருமதி சிதம்பரநாதன் தங்கச்சியம்மா (தங்கம்)

யாழ்ப்பாணம் இணுவில் மேற்கு, இணுவிலை பிறப்பிடமாகவும், வவுனியா பூந்தோட்டத்தினை வசிப்பிடமாகவும், தற்போது வவுனியா குட்செட் வீதியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற சிதம்பரநாதன் தங்கச்சியம்மா கடந்த (28.09.2022) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை (துரையாப்பா சாமியார்) சின்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சிதம்பரநாதனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற வர்களான கிருஷ்ணசாமி, சண்முகராசா, அழகசுந்தரம் மற்றும் பொற்கொடி, ஆகியோரின் அன்பு சகோதரியும், லோகேஷ்வரி (ரோசா), கருணாநிதி (ஓய்வுநிலை ஆசிரியர்), மற்றும் கருணாமூர்த்தி (சிறி -நெதர்லாந்து) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நமசிவாயம், சாந்தினி, பாமினி ஆகியோரின் அன்பு மாமியாரும், நிலஷ்சன் - லக்சிகா (சிங்கப்பூர்), சர்மிலன், ரஜீவன் - ஜிவ்வியா (சிங்கப்பூர்), தீபிகா, சரண்யா, சஜேனா, சாருஜா, யதுர்ஷன் (விஷ்ணு) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அனுகீஷ், கிஷால்யன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 7:30 மணியளவில் அவரது குட்செட் வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10:00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அன்னாரின் பூதவுடல் பூந்தோட்டம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

**தகவல்**
**குடும்பத்தினர்**

குட்செட் வீதி,
வவுனியா

**மகள் லோகேஷ்வரி (ரோசா) - 077 040 5120**
**பேரன் நிலஷ்சன் - 077 123 6813**

(cs 20578) (2.6)

# மரண அறிவித்தல்

## திருமதி சந்தானலட்சுமி சுந்தரலிங்கம்



தோற்றம்
16.05.1944

மறைவு
27.09.2022

வேலணையைப் பிறப்பிடமாகவும் லண்டன் (Luton) இனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சந்தானலட்சுமி சுந்தரலிங்கம் கடந்த (27.09.2022) செவ்வாய்க்கிழமை லண்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் - இரத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்ற கந்தையா - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் அவர்களின் பாசமிகு மனைவியும், ரவீந்திரன் (பிரான்ஸ்), ரகுநாதன் (பிரான்ஸ்), சுந்தரலட்சுமி (லண்டன்), சுந்தரேஸ்வரி (இந்தியா), ரேணுகா (யாழ்ப்பாணம்), றஜிதா (திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருவேணி (பிரான்ஸ்), றஜியந்தினி (பிரான்ஸ்), ரவீந்திரராஜா (லண்டன்), ஆறுமுகம் (இந்தியா), சுதாகரன் (யாழ்ப்பாணம்), றமணன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், நகுலேஸ்வரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற பரமேஸ்வரன் (பிரான்ஸ்) மற்றும் கலைச்செல்வி (வேலணை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நகுலேஸ்வரி (பிரான்ஸ்), பார்வதி (பிரான்ஸ்), இளங்கோ (வேலணை) ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரான்சை வதிவிடமாகக் கொண்ட திரிஷன், றமீனா, றண்ணியா, றஜிகா, றஜீனா, றஜிபன், றதனி, றயோன், லண்டனை வதிவிடமாகக்கொண்ட ஜனோத், தர்சன், இந்தியாவை வதிவிடமாகக்கொண்ட குமரன், பவித்திரன், யாழ்ப்பாணத்தை வதிவிடமாகக்கொண்ட பரத், ஷாருமதி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் 12 மணிவரை Lewsey Community Centre, Landrace Road, Luton LU4 OSW இல் நடைபெற்று, பூதவுடல்The Vale, Butterfield Green Rd, Luton Lu2 8DD. இல் தகனம் செய்யப்படும் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:** நகுலேஸ்வரன் (பிரான்ஸ்),
TP.No: -0033 7838 22990
சுந்தரலட்சுமி, ரவீந்திரராஜா (லண்டன்)
[illegible]கரன்
[illegible]கச் சந்தி 2ஆம் ஒழுங்கை,
அளவெட்டி கிழக்கு, அளவெட்டி. TP.No: - 077 795 1072


(cs 21030) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்சக்களால் இனி மீண்டெழவே முடியாது!

கொழும்பு, ஒக். 1
ராஜபக்சக்களுக்கான மக்கள் செல்வாக்கு இல்லாமல்போய்விட்டது. சரிந்துள்ள அவர்களால் இனி நேர்வழியில் மீண்டெழவே முடியாது- இவ்வாறு 'நவ லங்கா நிதாஷ் பக்சய'வின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெல்கம தெரிவித்தார்.
சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
'சந்திரிகா அம்மையாரின் ஆலோசனையின் பிரகாரமே நாம் செயற்படுகின்றோம். ஐக்கிய மக்கள் சக்தி, சம்பிக்க அணி, விமல் தரப்பு, சுதந்திரக்கட்சியின் அதிருப்திக் குழு என எதிரணியில் செயற்படும் நாம் அனைவரும் நிச்சயம் பொது மேடைக்கு வருவோம். இடதுசாரிக் கட்சிகள் ஒன்றிணைந்தாலும் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் ஒத்துழைப்பு அவசியம். ரணில் விக்கிரமசிங்க நல்லவர். பெரமுன அவரின் காலை வாரிவிடும். எனவே, தேர்தலொன்றுக்கு செல்வதே ஏற்புடைய நடவடிக்கையாக அமையும். அதேவேளை, ராஜபக்சக்கள் சரிந்துவிட்டனர். அவர்களுக்கு மக்கள் செல்வாக்கு இல்லை. எனவே, அவர்களால் மீண்டெழ முடியாது' - என்றார். (அ-ம-44)

## மரண அறிவித்தல்



### திரு. முருகேசு சின்னத்துரை

கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திரு. முருகேசு சின்னத்துரை அவர்கள் கடந்த (27.09.2022) செவ்வாய்க்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு நாகமுத்து தம்பதியரின் பாசமிகு மகனும், துரையப்பா சேதுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், செல்லம்மா அவர்களின் அன்புக் கணவரும், சூரியகுமாரி (பிரான்ஸ்), சிவகுமார், வசந்தரோகினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கதிர்காமநாதன் (பிரான்ஸ்), சிவனேஸ்வரி, சேந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், லூசில், அந்தோனி, சிவன், டமிதா, கோபனா ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை ஆறுமுகம், யோகம்மா, சந்திரசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (27.09.2022) செவ்வாய்க்கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றது.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 38171) 1/6

## யாழ். பல்கலைக்கழக 36ஆவது பட்டமளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 1
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 36ஆவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் 6ஆம், 7ஆம், 8ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டு அரங்கில் இடம்பெறவுள்ளது.
இந்தப் பட்டமளிப்பு விழாவில் முதலிரு நாள்களிலும் தலா மூன்று அமர்வுகளும் மூன்றாவது நாளில் இரு அமர்வுகளுமாக 8 அமர்வுகள் இடம்பெறவுள்ளன.
184 பட்டப்பின் தகைமை பெற்றவர்களுக்கும், 2 ஆயிரத்து 40 உள்வாரி மாணவர்களுக்கும், 153 தொலைக்கல்வி மாணவர்களுக்கும் இதன்போது பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. (ம)


## ஸ்பானிஸ் பெண்ணுக்கு பாலியல் தொல்லை இழப்பீடு செலுத்துமாறு நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக். 1
காரைநகர் பகுதியில் சுற்றுலாவுக்காக வந்த ஸ்பானிஸ் பெண்ணுக்கு பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில், குற்றவாளிகள் 12 பேரும் நேற்று திறந்த நீதிமன்றத்தில் மன்னிப்புக் கோரினர். இதையடுத்து அவர்கள் குறித்த பெண்ணுக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் குற்றவாளிகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.
இந்த வழக்கில் 13பேர் சந்தேகநபர்களாகக் கைதுசெய்யப்பட்டிருந்தனர். வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. சட்டவிரோத கூட்டம் கூடியமை, பாலியல் தொல்லை ஏற்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
13 பேரில் மூவர் அரச சாட்சிகளாக மாறியிருந்தனர். இருவர் பாலியல் குற்றங்கள் புரிந்தவர்களாக அடையாளம் காணப்பட்டனர். இதையடுத்து பாலியல் குற்றம் புரிந்தவர்களில் ஒருவர் 50 ஆயிரம் ரூபாவும், மற்றையவர் ஒரு லட்சம் ரூபாவும் குறித்த பெண்ணுக்கு இழப்பீடாகச் செலுத்த வேண்டுமென்றும், ஏனையவர்கள் தலா 20 ஆயிரம் ரூபா இழப்பீடாகச் செலுத்த வேண்டுமென்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது. (ம27)

## மரண அறிவித்தல்

### மூத்ததம்பி கனகலிங்கம்

### (காங்கேசன் சீமெந்து கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)



வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் மாவிட்டபுரத்தையும் கோப்பாயையும் வசிப்பிடமாகவும் கொண்ட மூத்ததம்பி கனகலிங்கம் கடந்த (27.09.2022) அன்று காலமானார்.
அன்னார் மூத்ததம்பி பாக்கியம் தம்பதியரின் அன்புப் புத்திரனும், செல்வராணியின் பாசக் கணவரும், சபாபதிப்பிள்ளை கண்மணியின் ஆசை மருமகனும், காலஞ்சென்ற அன்னலீலா, பரமேஸ்வரி, காலஞ்சென்ற சற்குணதேவி, கணேசலிங்கம் (Lanka Cement Ltd) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற குகதாசன், இந்திராணி ஆகியோரின் மைத்துனரும், முகுந்தன் (இ.போ.ச யாழ். சாலை), விஜிதா, ரகுந்தன் (கனடா), ரஜிதா, சுகுந்தன் (டோகா), சுஜிதா (லண்டன்), ஊர்ஜிதா, நீர்ஜிதா (பிரான்ஸ்), வைகுந்தன் (மருத்துவப் பிரதிநிதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அருந்தவநாயகி, பாஸ்கரன், சிவமலர் (கனடா), மதிவதனன், தனேஸ்வரி, முகுந்தன் (லண்டன்), வசீகரன், கரன்தீப் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கோகில கிருஷ்ணன் (அலியான்ஸ் இன்சூரன்ஸ்), மிதுலன் (அலியான்ஸ் இன்சூரன்ஸ்), மதுசூதனன், ஷாருமதன் (மாணவன்), கோகிலறமணன் (அலியான்ஸ் இன்சூரன்ஸ்), ஜனந்தன் (மாணவன்), ஜெயமதன் (மாணவன்), பூமிகா (மாணவி), பபிசனா (மாணவி), நர்மதா (மாணவி), விக்ரா (லண்டன்), பிருந்திக்கா (அலியான்ஸ் இன்சூரன்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மலர்வு:11.09.1943 உதிர்வு:27.09.2022

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தானும் தேசியத்தலைவரென்று கற்பனை செய்கிறாரா சுகாஷ்?

## மூத்த போராளி பஷீர் காக்கா ஆதங்கம்

யாழ்ப்பாணம், ஒக். 1

மாவீரர் நாள் நிகழ்வில் தேசியத்தலைவர் உரையாற்றுவதைப் போல் தன்னைக் காட்ட சட்டத்தரணி சுகாஷ் முனைவது கோமாளித்தனமானது. தேசியத் தலைவர் பொது எதிரிகள் பற்றியே மாவீரர் நாள் நிகழ்வில் சுட்டிக்காட்டியிருப்பார். தன்னையும் தேசியத் தலைவராக சுகாஷ் கற்பனை செய்வது சிறுபிள்ளைத்தனம் இவ்வாறு தெரிவித்துள்ளார் புலிகளின் முன்னாள் மூத்த போராளியும் திலீபனின் நினைவேந்தலை முன்னின்று முன்னெடுத்தவர்களில் ஒருவருமான மு.மனோகர் (பஷீர் காக்கா).

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

திலீபனின் 35ஆவது அஞ்சலிப்பில் பெரும்பாலான நிகழ்வுகள் திருப்தி அளித்தாலும், சிலர் தமது அரசியல் விருப்பு வெறுப்புகளை வெளிப்படுத்தியதை திலீபனின் ஆன்மா ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது என்பதை வலியுறுத்திக்கூறுகிறோம். முதல்நாள் நிகழ்வை பொதுவாக நடத்துவதில் எந்தச் சங்கடமும் இல்லை என முன்னணியின் ஏற்பாட்டுக் குழுப் பொறுப்பாளர் பொன் மாஸ்டர் கூறியிருந்தார். அவரது தரப்பில் பெரும்பாலும் அவர் மட்டுமே திலீபனைக் கண்டிருப்பவர். இவரது வார்த்தையை நம்பி இவ்வருடம் ஆரம்ப நிகழ்வுக்குச் சென்றோம். சட்டத்தரணி சுகாஷ் வரும் வரை எல்லாமே சுமுகமாக நடந்தன. இவர் ஒலிவாங்கியை எடுத்ததும் தமது முன்னாள் சகாக்களான மாநகர மேயர் தலைமையிலான அணியினரை சாடத் தொடங்கினார். இவர் அடிக்கடி பயன்படுத்தும் ஒட்டுக்குழு என்ற பதமும் இதில் அடங்கியிருந்தது. எமது எதிர்பார்ப்பு தகர்ந்தது. திலீபனின் புனிதமான நினைவு நிகழ்வில் இவ்வாறான அசிங்கம் நிகழ்வதை மாமனிதர் குமார் பொன்னம்பலம் உயிரோடு இருந்திருந்தால் நிச்சயம் ஏற்றுக்கொண்டிருக்கமாட்டார். அவரோடு உத்தியோகபூர்வமாக பேச்சு நடத்த சீலன் தலைமையில் முதன் முதல் சென்ற 4 பேர் கொண்ட அணியில் கலந்துகொண்டவன் என்ற வகையில் இதனை நான் உறுதியாகக் கூறுகிறேன்.

தமிழ் அரசியல் கைதிகளுடைய வழக்குகளை அமரர் குமார் எந்தவிதமான கொடுப்பனவும் வாங்காமல் வாதாடி விடுவித்ததை நான் நன்றியுடன் நினைவுபடுத்துகின்றேன். அவரது புகழை மாசுபடுத்தும் வகையில் அவரது மகன் கண்ணெதிரே நடைபெறும் சம்பவங்களை கண்டும்காணாமல் இருந்தது மேலும் அதிர்ச்சி அளிக்கின்றது. நினைவேந்தல் நிகழ்வில் சுகாஷ் அரசியல் பேசுவதும், மாவீரர் நாள் நிகழ்வில் தேசியத்தலைவர் உரையாற்றுவதை போல் தன்னைக் காட்ட முனைவதும் அடுத்த கோமாளித்தனம். தேசியத் தலைவர் பொது எதிரிகள் பற்றியே மாவீரர் நாள் நிகழ்வில் சுட்டிக்காட்டியிருப்பார். சுகாஷின் உரை இலக்குத் தவறி தமிழ் தரப்பை நோக்கியது. அதற்கு நினைவேந்தல்கள் தவிர்ந்த ஆயிரம் மேடைகளை அமைக்கலாம். சுகாஷின் நடவடிக்கைகளை நியாயப்படுத்த முன்னாள் போராளி பொன் மாஸ்டர் முனைந்தது அடுத்த அதிர்ச்சி. முதல் நாள் அளித்த உறுதிமொழிக்கு மாறானது. சுகாஷின் நடவடிக்கையே பொதுக் கட்டமைப்பு ஒன்றை அவசரமாக ஏற்படுத்தும் நிலையை ஏற்படுத்தியது. இவ்வளவு நாளும் தமிழரின் கடைசித் தலைவர் கஜேந்திரகுமார் என்று கூறி வந்த அவர், இப்போது தன்னையும் தேசியத் தலைவராகக் கற்பனை செய்வது சிறுபிள்ளைத்தனம், அன்று அந்த நிகழ்வை அவர் கொச்சைப்படுத்தாமல் இருந்திருந்தால் பொதுக் கட்டமைப்புக்கான தேவையே இருந்திருக்காது.

மேலும் கடந்த இரு மாதங்களுக்கு முன்னரே திலீபனின் நிகழ்வை சச்சரவில்லாமல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க வேண்டும் என்ற நோக்கில் தீவக நினைவேந்தல் குழுவினர் சில தரப்பினரை அணுகினர். தூபி அமைந்திருக்கும் இடம் மாநகரசபையின் நிர்வாகத்தின் கீழ் இருப்பதால் நகர முதல்வரையும் சந்தித்தனர். அவர் நகரின் முதல் பிரஜை என்ற வகையில் நகரபிதா எனவும் அழைக்கப்படுவார். அதன் அர்த்தத்தைச் சரியாக அவர் உணர்ந்து கொள்ளாதது வருத்தமளிக்கிறது. இப்போது நாம் ஆட்சியில் இருப்பதால் நாமே இதனைச் செய்யப் போகிறோம் என்று கூறியதன் மூலம் ஏனைய தரப்பினரை அணுகும் முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார். நகர பிதா என்ற வகையில் பொதுக் கட்டமைப்புக்கு பல்கலைக்கழக மாணவர்கள், பொது அமைப்புக்கள், அரசியல் கட்சிகள், தமிழ் உணர்வாளர்களுக்கு அழைப்பு விடுத்திருக்கவேண்டும். அவர்களால் உருவாகும் கட்டமைப்பிடம் பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்டு தம்மிடம் இருந்து கோரும் உதவிகளை இயன்ற வரை செய்து தருகிறோம் என்று ஒதுங்கி இருக்கவேண்டும் - என்றுள்ளது.

(அ-ம)


### வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் மொத்த வியாபார பலசரக்கு கடைக்கு உதவியாளர்கள், சிட்டை எழுதுனர்கள் உடன் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.
தொ.இல.: 076 0094 946

### வேலையாள் தேவை

கொழும்பில் வசிக்கும் யாழ்ப்பாணத்தை சேர்ந்த குடும்பத்திற்கு வீட்டு வேலைகள் செய்வதற்கு பெண் வேலையாள் தேவை. தங்கும் இடம், உணவு வழங்கப்படும். ஆர்வம் உள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். தொ.இல.: 077 3866 250

### வீடு வாடகைக்குத் தேவை

அச்சுவேலியில் தொழிற்பேட்டையில் இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு நல்ல நிலையில் அமைந்துள்ள வீடு தேவையாக உள்ளது.
குறிப்பு: தோப்பு அச்சுவேலி பகுதிகளில் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு:077 777 5068
(CS 21033)1-6

### யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்

# தீபாவளி

## ஜவுளிக் கொண்டாட்டம்

ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தலைசிறந்த ஆடைகள்
திருமணப் பட்டுச்சாறிகள்,
கொட்டன் சாறிகள்,
Tops, Party Frocks,
சல்வார்கள்,
சல்வார் துணிகள்,
சேட், T.சேட், சிறுவர்,
சிறுமியருக்கான
ஆடைத் தெரிவுகள்



# இந்தியன் செலக்ஷன்

இது பிரமாண்ட ஜவுளித் துறையின் சாம்ராஜ்யம்

காலம் : 01.10.2022 முதல் 25.10.2022 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் யாழ்ப்பாணம்.
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்


### ஐஸ் போதை...

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மானிப்பாய் சமுர்த்தி வங்கி ஒழுங்கைப் பகுதியில் ஐஸ் போதைப்பொருளை உடைமையில் வைத்திருப்பதாக மானிப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, சம்பவ இடத்துக்கு விரைந்த மானிப்பாய் பொலிஸார் 260 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளைக் கைப்பற்றியதுடன் அதை உடைமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த 15 வயதான சிறுவனையும், 25 வயதான இளைஞனையும் கைது செய்தனர். அவர்களிடம்மேலதிகவிசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டன. (அ-ம-125)

### செல்வபுரத்தில்...

கோப்பாய் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து மேற்கொண்ட சிறப்பு நடவடிக்கையின்போதே அவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளனர். கைதான சந்தேகநபர்கள் 21, 23, 26, 27 வயதுடையவர்கள். அவர்களிடம் இருந்து 3.330 கிராம், 50 மில்லிகிராம், 60 மில்லிகிராம், 80 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது. சந்தேகநபர்களிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.

(அ-ம-125)

### உயிர்கொல்லி...

பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா போதை ஒழிப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் பல்வேறு பகுதிகளில் போதை ஒழிப்புப் பிரிவினரால் நேற்று சிறப்புச் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போதே தோணிக்கல் மற்றும் கோயில்குளம் பகுதிகளில் இருந்து மேற்படி இரண்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தோணிக்கல் பகுதியிலிருந்து 219 மில்லிகிராம் ஹெரோய்னும், கோயில்குளம் பகுதியிலிருந்து 129 மில்லிகிராம் ஹெரோய்னும் மீட்கப்பட்டன. அவற்றை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் 51 மற்றும் 44 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்...

தேசிய பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் தமிழ் மக்களுடன் அரசு விரைவில் பேச்சை ஆரம்பிக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோர் உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகங்களிடம் தெரிவித்திருந்தனர். அதேவேளை, தொடர்ச்சியாகத் தமிழ் மக்களை ஏமாற்றாமல், பேச்சை இதயசுத்தியுடன் அரசு நடத்தவேண்டுமென்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தியிருந்தார்.

இந்த மூன்று தலைவர்களினதும் கருத்துக்களுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே சரத் வீரசேகர மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'தேசிய பிரச்சினைகள் என்றால் அது தமிழ் மக்களின் பிரச்சினைகள் அல்ல. இந்த நாட்டில் தமிழ் மக்கள் மட்டுமா வாழ்கின்றார்கள்? மூவின மக்களுக்கும் பொதுவான பிரச்சினைகள் இருக்கின்றன. அடிப்படைப் பிரச்சினைகள் இருக்கின்றன. பொருளாதாரப் பிரச்சினைகள் இருக்கின்றன. முதலில் அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டும்.

தேசியப்பேரவையில் இணையமாட்டோம் என்று பிடிவாதம் பிடிக்கும் சம்பந்தன் குழுவினர், தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைக் காணும் பேச்சை இதயசுத்தியுடன் அரசு நடத்த வேண்டுமென்று எப்படிக் கூறமுடியும்? இந்த நாட்டில் தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் எதுவுமில்லை. அவர்கள் நாட்டில் 24 மணிநேரமும் சுதந்திரமாக நடமாட முடியும். எங்கும் செல்லலாம்; எங்கும் குடியேறலாம்; எங்கும் வழிபடலாம். ஆனால், சிங்கள மக்களுக்கு எதிராகவும், பௌத்த மதத்துக்கு எதிராகவும் தான் தமிழ் மக்கள் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றார்கள்.

வடக்கு - கிழக்கில் சிங்கள - பௌத்த மக்கள் குடியேறவோ அல்லது வழிபடவோ முடியாத நிலைமையை தமிழ் மக்களும் அவர்களின் பிரதிநிதிகளான தமிழ் அரசியல்வாதிகளும் ஏற்படுத்தி வருகின்றார்கள். தமிழ் மக்கள் தாமாகவே பிரச்சினைகளைத் தேடுகின்றார்கள். எனவே, தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்'- என்றார். (அ-ம-22)

## டெங்குத்...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இந்த வருடம் - இதுவரையான காலப்பகுதியில் மட்டும் டெங்குத் தொற்றால் 8 பேர் உயிரிழந்துள்ளனர். 2 ஆயிரத்து 548 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று யாழ்ப்பாணம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் டெங்குத் தொற்று தீவிரமாகி வருவது தொடர்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணத்தில் கடந்த இரண்டு வருடங்களாக டெங்குத் தொற்றின் பரவல் குறைந்தே காணப்பட்டது. கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்துக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையால் டெங்குப் பரவல் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே இருந்தது. ஆனால், இந்த வருடம் நிலைமை மாறியிருக்கின்றது. இந்த வருடம் இதுவரையான காலப் பகுதியில் மட்டும் 8 பேர் டெங்குத் தொற்றால் உயிரிழந்துள்ளதுடன் 2 ஆயிரத்து 548 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தாமதமாக மருத்துவ உதவியை நாடியமைதான் இறப்புக்கு முதன்மைக் காரணமாக இருக்கின்றது.

எமது நாட்டில் அடுத்தடுத்த வாரங்களில் பருவமழை ஆரம்பிக்கப்படவுள்ளதால் டெங்குத் தொற்று இனித் தீவிரமாகக் கூடிய வாய்ப்புக்களும் ஏதுநிலைகளும் காணப்படுகின்றன. இதனால், டெங்குத் தொற்றைத் தடுப்பதற்காக யாழ்ப்பாணத்தில் அடுத்தடுத்த வாரங்களில் டெங்குக் கட்டுப்பாடு தொடர்பான சிறப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இரண்டு கட்டங்களாக நாம் டெங்குக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். முதற் கட்டமாக ஒக்ரோபர் மாதம் மூன்றாம் திகதி முதல் ஐந்தாம் திகதி வரையான மூன்று நாள்களிலும், இரண்டாவது கட்டமாக ஒக்ரோபர் மாதம் 12ஆம் திகதி தொடக்கம் 14ஆம் திகதி வரையான மூன்று தினங்களும் இந்த விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன - என்றார். (அ-ம-125)

## 'நிஜாம்'...

அந்த மாணவன் பொலிஸாரால் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளான்.

குறித்த மாணவன் முன்னரும் நிஜாம் பாக்குடன் பாடசாலைக்கு வந்த நிலையில் அதிபர் அந்த மாணவனை எச்சரித்து அனுப்பியுள்ளார். இந்த நிலையில், அந்த மாணவன் மீண்டும் நிஜாம் பாக்குடன் நேற்றுப் பாடசாலைக்கு வந்துள்ளான். இதையடுத்து இது தொடர்பில் அதிபர் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து, பொலிஸாரால் அந்த மாணவன் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளான். (அ-ம-125)

## போதைப்...

உத்தரவிட்டுள்ளார்.

பாடசாலைக்கு அவப்பெயர் ஏற்படும் என வடக்கு பாடசாலைகளில் போதைப் பாவனையில் ஈடுபடும் மாணவர்களது தரவுகள் மறைக்கப்படுகின்றன எனக் கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய வடக்கு மாகாண ஆளுநர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

இதுகுறித்து ஆளுநரால் மாகாண சுகாதார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு எழுத்து மூலமான அவசர அறிவுறுத்தல் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிட்டுள்ளதாவது:-

மறுஅறிவித்தல்வரை ஒவ்வொரு திங்கட்கிழமையும் மாணவர்களால் மேற்கொள்ளப்படும் போதைப்பொருள்களின் பயன்பாடு தொடர்பான விவரங்களை மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஆளுநரது செயலாளருக்கு இணைப்புச் செயலாளர் ஊடாக வழங்கவேண்டும்.

ஒவ்வொரு பிள்ளையும் மிகுந்த கவனத்துடன் பராமரிக்கப்படுவதை உறுதிசெய்வதோடு இரகசியத் தன்மை உறுதிப்படுத்தப்படல்வேண்டும். போதைப்பொருள் பாவனையில் ஈடுபடும் மாணவர்கள் கண்டறியப்பட்டு அவர்களை சிகிச்சைக்குட்படுத்தவும் அல்லது புனர்வாழ்வு அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

பாடசாலைகளில் போதைப்பொருள் சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டு கல்வி அமைச்சால் வெளிப்படுத்தப்படாத பட்சத்தில் பாடசாலை அதிபர் மற்றும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்கொள்ளவேண்டி நேரிடும்.

மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளருடன் இணைந்து சம்பவங்களை நிரல்படுத்தி இணைப்புச் செயலாளர் ஊடாக ஆளுநரின் செயலாளருக்குப் பிரதியுடன் ஆளுநருக்கு வழங்கும்வகையில், சமர்ப்பிக்கமுடியும்.

மேலும் வடக்கு சுகாதார அமைச்சானது சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் ஊடாக ஒவ்வொரு மாவட்டத்திலும் போதைப்பொருள் பாவனை மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பாக அவதானிப்புக்களைச் செலுத்தி உறுதிசெய்து விவரங்களை ஆளுநரின் இணைப்புச் செயலாளர் உடன் இணைந்து பணியாற்றி ஆளுநருக்கு அட்டவணைப்படுத்த வேண்டும்.

இதுதொடர்பில் கள நிலைவர அறிக்கையை ஆளுநர் செயலாளர் உரிய உத்தியோகத்தர்களை ஒன்றுகூட்டி ஒவ்வொரு 5 கிழமைக்கு ஒருதடவை உரிய நடவடிக்கைக்கும் பரிசீலனைக்குமாக அறிக்கை செய்தல்வேண்டும் - என்றுள்ளது. (அ-ச-27)

## இணைய...

னர் என்று பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி கனகசபாபதி வாசுதேவா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம், வடமராட்சிப் பகுதியில் இந்த வருடம் இதுவரையான காலப்பகுதியில் இரண்டு சிறுவர்கள் இணைய விளையாட்டுக்கு அடிமையான நிலையில் உயிரிழந்துள்ளனர். 15 மற்றும் 14 வயதான இரண்டு சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். இவர்களில் 15 வயதான சிறுவன் இணைய விளையாட்டில் (ஒன்லைன் கேம்) தனது நண்பர்களுடன் ஈடுபட்டுள்ளான். அந்தச் சிறுவன் விளையாட்டில் தோல்வியடைந்த நிலையில், அவனது நண்பர்கள் குறுஞ்செய்தி வழியாகக் கேலி செய்ததை அடுத்து தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளான். 14 வயதான சிறுவன் இணைய விளையாட்டில் ஈடுபட்டபோது தாயார் கண்டித்ததை அடுத்து தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளான். இவர்கள் இருவரினதும் உயிர்கள் பறிக்கப்படுவதற்கு புறக்காரணிகள் சில இருந்தாலும் 'வீடியோ கேம்' என்பதுதான் பிரதான காரணியாகவுள்ளது. ஆதலால், பெற்றோர் தமது சிறுவர்களின் நலனிலும் அவர்களின் செயற்பாடுகளிலும் அதீத அக்கறையுடன் செயற்படவேண்டும் - என்றார். (அ-ம-125)

## மண்கும்பானில்...

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-

வேலணை - மண்கும்பான் பகுதியில் தனியார் காணியொன்றை அதன் உரிமையாளர் துப்புரவுக்கு உட்படுத்திய நிலையில் சந்தேகத்துக்கிடமான பொருளொன்றை அவதானித்துள்ளார். இது தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் குறித்த மோட்டார் ஷெல்லை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (அ-ம-125)

## மாணவர்கள்...

பட்டம் சூட்டிக்கொண்டிருக்கின்றார்கள் - இவ்வாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியின் பாடசாலைக் கட்டடத் தொகுதி திறப்பு விழா அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பங்கேற்புடன் நடைபெற்றது. நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில்;

பல சிரமங்களுக்கு மத்தியில் உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றில் எமது மாகாணம் மூன்றாவது இடத்தைப் பெற்றுள்ளது. மூன்றாவது இடத்திலிருந்து முதலிடத்துக்கு முன்னேறும் வகையில் எங்கள் மாணவர்கள் திட்டமிட்டு கற்கவேண்டும். யாழ். மாவட்டத்தில் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளைப் பார்க்கும்போது அதிகளவான மாணவர்கள் வர்த்தக மற்றும் கலைத்துறையைத்தான் தெரிவுசெய்து அதில் சிறந்த பெறுபேற்றை பெற்றிருக்கின்றார்கள். அவர்களுடைய எதிர்காலம் சற்றுக் கேள்விக்குறியானதுதான். தொழில்நுட்பம் சார்ந்த கல்வியை தெரிவு செய்வதன் ஊடாக எதிர்காலத்தை சிறப்பானதாக மாற்றியமைக்கலாம்.

பட்டதாரியானால் வேலை கிடைக்கும் என்று யாரும் நினைத்து விடாதீர்கள். எந்தவொரு காலத்திலும் இனி பட்டதாரிக்கு வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இல்லை. நீங்களாகத்தான் வேலைகளைத் தேடிக்கொள்ளவேண்டும். பத்திரிகைகள் அண்மைக்காலமாக ஏன் இப்படி எழுதிக் கொண்டிருக்கின்றன என்பது எனக்குத் தெரியவில்லை. பத்திரிகைகளைப் பார்ப்பதற்கே வெட்கமாக இருக்கின்றது.

போதைப் பொருளுக்கு அடிமையாகிவிட்டதாகக் கூறிக் கொண்டிருக்கின்றார்கள். அதில் உண்மை இருக்கிறது. ஆனால், தொடர்ச்சியாக கேவலப்படுத்திக் கொண்டிருக்கின்றார்கள். தமிழர்களையும் எங்களுடைய மாகாணத்தையும் எங்களுடைய பண்பாட்டையும் மிகக் கேவலமாக அவர்கள் சித்திரித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

உண்மையிலேயே எங்களுடைய மாணவர்களுக்கு நாங்கள் நல்ல விடயங்களை புகட்டவேண்டும். எங்களுடைய பாடசாலை ஆசிரியர்கள் நேரமில்லாவிட்டாலும் அதற்கென ஒரு நேரம் எடுத்து நல்ல விடயங்களை மாணவர்களுக்கு சொல்லிக்கொடுங்கள். இரண்டு பாட வேளைகள் உள்ள ஆசிரியர்கள் ஒரு பாட வேளையாவது மாணவர்களுக்கு போதைப்பொருள் பாவனை அல்லது பொது விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் என்ன ஏற்படும் என்பது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்.

நாங்கள் போதைப்பொருள் தொடர்பான விழிப்புணர்வை தொடர்ந்து முன்னெடுத்தால் மாணவர்களுக்கு அதில் (போதைப் பொருளில்) ஆர்வம் வந்துவிடும். தெரியாதவர்களுக்கு சொல்லிக் கொடுத்தது போலும் அமைந்துவிடும். மாணவன் அதை அறிவதற்கு முற்படுவான். அவ்வாறான நிகழ்வை நாங்கள் மாணவர்களுக்கு சொல்லக்கூடாது. நாங்கள் தீமைகளை மட்டுமே சுட்டிக்காட்டவேண்டும். போதைப்பொருளை பயன்படுத்தினால் என்ன நடக்கும், உயிருக்கு என்ன பாதிப்பு ஏற்படும், என்பவற்றைச் சொல்லிக் கொடுங்கள் - என்றார். (அ-ஒ-125)

## சீனச்...

உலர் உணவுப் பொதிகளை வழங்குவதற்கு முடிவெடுத்துள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சீனச் செஞ்சிலுவைச் சங்கத்திடம் இருந்து இந்த உதவிகளைப் பொறுப்பேற்று வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 1

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை நவராத்திரி விழாவின் இறுதி நாளான விஜயதசமி அன்று முற்பகல் 10.30 மணிக்கு கும்ப பூசையுடன் விஜயதசமி உற்சவம் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து பிற்பகல் 2.30 மணிக்கு வசந்தமண்டபப் பூசை இடம்பெற்று மாலை 4 மணிக்கு வன்னி வாழை வெட்டு உற்சவம் நடைபெறும். அத்துடன் நவராத்திரி விழாவை முன்னிட்டு ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் நவராத்திரி கலை நிகழ்வுகள், இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஒ.14)

## சிறுவர், முதியோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 1

யாழ்ப்பாணம் - இளையதம்பி இந்து வித்தியாலயத்தில் சிறுவர், முதியோர் தின நிகழ்வு, நாளைமறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இதன்போது சீருடைத்துணி, காலுறை உறுதிச்சீட்டு வழங்கலும், நீர்வடிதாங்கி, கழிப்பறை புனரமைத்துக் கையளித்தல் ஆகியனவும் இடம்பெறவுள்ளன. வித்தியாலய அதிபர் சி.நந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலய கல்விப் பணிப்பாளர் மு.இராதாகிருஷ்ணன் கலந்துகொள்ளவுள்ளார். (ஒ-14)

சாவகச்சேரி ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட மாணவர் சுகவீன அறை, சாவகச்சேரி பதில் சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் எஸ். சிவசுதனால் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திறந்துவைக்கப்பட்டது. (ய-9)



**Office Space Available**

First floor of a Commercial Building at Chunnakam area is available for Leasing or Rent. 075 075 4802

**வீடு வாடகைக்குண்டு**

நிலத்துடன் வீடு (4-6 rooms) மற்றும் முதலாம் மாடி வீடு என்பன நீண்டகால வாடகைக்கு உண்டு. ஏழாலை தெற்கு 764 Bus route இல். 077 3444 801

## உதைபந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், ஒக். 1

திருநெல்வேலி மகாத்மாஜீ சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு மகாத்மாஜீ விளையாட்டுக் கழகம் யாழ்.லீக்கின் அனுமதியுடன் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு மகாத்மாஜீ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இறுதிச் சுற்றில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் உதயசூரியன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-14)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில்
15 பரப்பு (நிலபரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- மல்லாகம் சந்தியிலிருந்து பலாலி விமானநிலையம் செல்லும் பிரதான வீதிக்கு அருகாமை
- தெல்லிப்பளை வைத்தியசாலையிலிருந்து 750 M தூரத்தில்
- K.K.S வீதியில் இருந்து 1KM தூரத்தில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில

077 874 8135 / 076 755 8606

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 04 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு.

- நான்கு பரப்பாகவும், இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி (காப்பெற் வீதி) முகப்புடன்.
- 784 இலக்க பாதை போக்கு வரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி.
- பொன்னாலை ரவுண்டப் போட் சந்தியிலிருந்து 1 KM தூரத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரி (Jaffna College) இருந்து 1 KM தூரத்தில்.
- ஒரு பரப்பின் (நிலபரப்பு) விலை 1½ லட்சம் 150,000/= மட்டும்.
- 20 அடிப் பாதையுடன்

தொடர்பு: 0772880152

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடியில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- A09 வீதியில் இருந்து இரண்டாவது காணி.(50m தூரம்)
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நன்னீருற்று நிலம் நல்ல சூழல்
- வீடுகள். திருமண மண்டபங்கள் அமைக்க ஏற்ற இடம்.
- கைதடி சந்தியிலிருந்து 500 m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 10 லட்சம் ரூபா மட்டும்.

தரகர் தேவையில்லை , பார்வையிடும் நேரம் காலை 09.00- மாலை 06.00 0776585999

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் இருபாலையில் 02பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1KM தூரத்தில்
- 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்.
- BH Lane விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்
- 18 அடி பாதையுடன் நல்லசூழல் நன்னீர் ஊற்று நிலம்
- யாழ்.நகரிலிருந்து 4Km தூரம்
- 1 பரப்பின் விலை (600000/=) ரூபா ஆறு லட்சம்
- பார்வையிடும் நேரம் காலை 9.00 தொடக்கம் 6.00 மணி வரை

0767558606

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 17 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு

- நிலப்பரப்பு
- 18 அடிப் பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல் திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும்
- அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும்
- வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

பார்வையிடும் நேரம்
காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை
தரகர் தேவையில்லை.

தொடர்பு:- ஜெயம்

077 8147 389
077 2417 589




(CS 46847)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.